REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 12உ சனி (27—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 13உ ஞாயிறு (28—7—57) [இதழ் 36

மலைசாதிப் பெண்களை மணப்போருக்கு பரிசு

ஐதாராபாத் ஜூலை 26—

'மலைவாழ் சாதிப் பெண்களை மணந்து கொள்கிற சாதி இந்துக்களுக்கு சர்க்கார் பரிசு தரவேண்டும்' என்று, ஆந்திர சட்டசபையில் ஒரு பெண் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட மலை சாதி வகுப்பைச் சேர்ந்த திருமதி வாணி ரமணாராவ் என்ற எம்.எல்.ஏ.-தான் சட்டசபையில் இந்த யோசனை கூறியிருக்கிறார்.

இதுபோல, பீகார் மாநில சர்க்காரிலும் நடைபெறுவதாக அவர் எடுத்துக்காட்டியதுடன், இதுபோன்ற மலை சாதிப் பெண்களை மணந்துகொள்பவர்களுக்கு, சர்க்கார் உத்தியோகம் கொடுப்பதில் சலுகையும் காட்டவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

நேரு பண்டிதர் சமரச முயற்சி தோல்வி!

தபால் ஊழியர் கோரிக்கைகளுக்கு இணங்க மறுப்பு

'ஆக. 9: வேலைநிறுத்தம் உறுதி' என்கிறார் ஊழியர் தலைவர்

டெல்லி சர்க்காருக்கு தமிழக சர்வ கட்சியினர் வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 26—

தபால் ஊழியர் வேலைநிறுத்தத்தை நிறுத்துவதற்கு நேரு பண்டிதர் மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றிருக்கிறது.

தபால் ஊழியர் சங்கத் தலைவர்களை அழைத்து பண்டிதர் சமரச முயற்சி செய்தார்; ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

சுமார் 70 நிமிட நேரம் ஊழியர் சங்கத்தவருடன் பேசிக்கொண்டிருந்தும், ஊழியர்களின் கோரிக்கைகள்பற்றி ஏதும் முடிவு கூறாமலேயே பண்டிதர் சென்றுவிட்டதாக சங்கத் தலைவர்கள் கூறியிருக்கின்றனர்.

சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகித அமைப்பு குறித்து ஆய்வதற்காக அமைக்க உத்தேசிக்கப்படும் குழுவிற்கு 'சம்பளக் கமிஷன்' என பெயர் கொடுப்பது பற்றி தனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை என்று கூறியுள்ளாராம், பண்டிதர்!

ஆனால், 'கிராக்கிப்படி உயர்வு வேண்டும்' என்ற கோரிக்கை பற்றி எதுவுமே கூற இயலாதிருப்பதாகப் பண்டிதர் தெரிவித்தாராம்!

மேலும், 'கிராக்கிப்படி'யை அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்துத் தரவேண்டும் என்ற ஊழியர்களின் கோரிக்கை பற்றியும் பண்டிதர் ஏதும் சொல்லாமல் இருந்துவிட்டாராம்!

பாதி பேசிக்கொண்டிருக்கும் போதே பண்டிதர் எழுந்து சென்றுவிட்டாராம்!

மந்திரிகள் லால்பகதூர் சாஸ்திரியும், நந்தாவும் மட்டும் மீண்டும் சிறிது நேரம் பேசினராம்!

இந்தத் தகவல்களைத் தந்துள்ள ஊழியர் சங்கத் தலைவர்கள், 'ஆகஸ்டு 1-ந் தேதி நள்ளிரவிலிருந்து வேலைநிறுத்தம் தொடங்குவது என்ற முடிவு, இந்தச் சந்திப்பின் பயனாக மாறாமலேயே இருக்கிறது; வேலைநிறுத்தம் நடைபெற்றே தீரும்' என்று தெரிவித்திருக்கின்றனர்.

★

'வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பீர்'

சர்க்காருக்கு சர்வகட்சியினர் வேண்டுகோள்

தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் தவிர ஏனைய கட்சிகள் எல்லாம், தங்களின் ஒருமுகமான ஆதரவினை தபால்-தந்தி ஊழியர்களுக்கு அளித்திருக்கின்றன.

அண்ணா, மற்றும் டி. எஸ். இராமசாமி (கா.சீ.க.), பி. எஸ். சின்னதுரை (பி.சோ.), பி. எஸ். பக்கிரிசாமிபிள்ளை (சோ.), கே. சட்டநாதக் கரையாளர், (க. சீ. க) வி. கே. கோதண்டராமன் (கம்.) ஆகிய ஆறு சட்டமன்ற உறுப்பினர்களும், இரா. நெடுஞ்செழியன் (பொதுச்செயலாளர் தி. மு. க.), எஸ். சுப்பிரமணியம் (பி. சோ.), ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் கழகம்), எம். ஆர். வெங்கட்ராமன் (கம்.) ஆகியோரும் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தபால் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நடேற்றிக் கொள்வதற்காக இரண்டாண்டுக் காலமாக அமைதியான வழிகளில் முயற்சித்தனர். சமாசமாகப் பரிகாரம் காண மனப்பூர்வமாக முயற்சித்தனர்; ஆனால் பலன் இல்லை; சர்க்கார் பிடிவாதம் காட்டுகின்றனர். எனவேதான் இப்போது வேலை நிறுத்தம். சர்க்கார், இந்த ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நடேற்றி வைத்து, வேலைநிறுத்தம் ஏற்படாவண்ணம் தவிர்க்கவேண்டும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

விசாரணைக் குழு

சென்னை, ஜூலை 27—

'சென்னை உயர்தர போலீஸ் அதிகாரி ஒருவர்மீது சட்டசபையில், சட்டசபை தி. மு. கழகத் துணைத் தலைவர் தோழர் க. அன்பழகன் அவர்கள் சில குற்றச்சாட்டுகளை எழுப்பினார்; அந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக, ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்படுவார்' என்று, நேற்று சட்டசபையில் மந்திரி பக்தவத்சலம் கூறினார்.

சபைத் தலைவரின் அனுமதியைப் பெற்று மந்திரி பக்தவத்சலம் சபையில் வெளியிட்ட அறிக்கையாவது :—

"போலீஸ் மானியக் கோரிக்கை பற்றி கடந்த ஜூலை 17-ந் தேதி இந்தச் சபையில் விவாதம் நடைபெற்றபோது தோழர் க. அன்பழகன் (தி. மு. க.) பெயர் குறிப்பிடாமல், போலீஸ் இலாகாவின் உயர்தர அதிகாரி ஒருவரின் நடத்தை குறித்து ஆட்சேபித்து சில குற்றச்சாட்டுகளை எழுப்பினார். போலீஸ் இலாகா தலைமை அதிகாரியான இன்ஸ்பெக்டர்—ஜெனரலிடம் இதுபற்றிக் கேட்கப்பட்டபோது அவர் தனது கருத்தை தெரிவித்திருக்கிறார்.

"அந்த அதிகாரி, குற்றச்சாட்டுகள் தனக்கு எதிராகவே கிளப்பப்பட்டிருக்கின்றன என்றும், எனவே, தான் பதவியிலிருந்து விலகுவதற்குமுன் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று விரும்புவதாயும் தெரிவித்திருக்கிறார். அவரே, இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி ஒரு பாரபட்சமற்ற விசாரணை வேண்டும் என்று கேட்டிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகளைபற்றி விசாரணை நடத்தவேண்டும் என்று அந்த அதிகாரி தாமாகவே முன்வந்து கேட்டிருப்பதை இந்த சர்க்கார் பாராட்டுகிறது.

"எனவே, இப்போது இந்தக் குற்றச்சாட்டுகள்பற்றி விசாரிக்க, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியைக் கலந்துகொண்டு, ஒரு நீதிபதியை நியமிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது."

10,78,000 மரமேறிகள் வேலை இழந்தனராம்!

சென்னை, ஜூலை 26—

மதுவிலக்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதால் மொத்தம் 10,78,000 மரமேறிகள் வேலை இழந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் சட்டசபையில் தெரிவித்தார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதிலளிக்கையில், சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்திப் போலீசார் பதனீர் விற்கும் பெண்களைத் தடை செய்யமாட்டார்கள் என்றும், மத்திய அரசாங்கம் மூடிவிட்ட கடலூர் பனைவெல்லம் தயாரிக்கும் தொழிற்சாலையை மீண்டும் மாநில அரசாங்கம் திறக்கும் நோக்கம் இல்லை என்றும் கூறினார்.

ஆமை வேகத்தில் நகரும் அரசாங்கம்!

சென்னை, ஜூலை 26—

"மற்ற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, அமைச்சர்கள் குறைந்தது ஒரு மாத காலத்திற்குள் விடையளித்துவிடுகின்றனர். இந்த மாநில அரசாங்கத்திற்கு மட்டும், கேட்கும் கேள்விகளுக்குப் பதில் தருவதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அமைச்சரவை ஆராய வேண்டுகிறேன்; இது என் குற்றச்சாட்டல்ல; சட்டமன்றத்தின் நன்மையைக் கருதியே இதைக் கூறுகிறேன்"

என்று, சென்னை சட்டசபையில் அவைத் தலைவர் தெரிவித்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

சட்டமன்றத்தில் பல கேள்விகள் பதிலளிக்கப்படாமல் இருப்பதை முன்னிட்டே சென்னை அரசாங்கத்திற்கும், அமைச்சரவைக்கும் அவர், இந்த 'நற்சான்று' வழங்க வேண்டியதாயிற்று!

சென்னை, ஜூலை 24—

மாநில மின்சார நிறுவனத்திற்கு ரூ. 8 கோடி கடன் தருவதற்கு சட்டசபை அனுமதியளித்துள்ளது.

'வீட்டுவாடகைக் கட்டுப்பாடுசட்டம் தெளிவாக உருவாக்கப்படவில்லை'

சட்டசபையில் க. அன்பழகன் விளக்கம்

சென்னை, ஜூலை 24—

சென்னை வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் 1959-ம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதி வரையில் அமுலில் இருக்கும்படியான மசோதா ஒன்றை சட்டசபையில் அமைச்சர் இராமய்யா கொண்டு வந்தார்.

க. அன்பழகன்

'மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்' என்ற அமைச்சரின் பிரேரணையின் மீது தோழர் க. அன்பழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் முன்னமேயே நீடித்துவருகிறது; அதை மேலும் நீடிக்கவே இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது; ஆனால், இந்தச் சட்டம் தெளிவாக உருவாக்கப்படவில்லை; இதில் பல குறைபாடுகள் இருப்பதின் காரணமாக சிக்கல்கள் அதிகரித்து, வாழ்க்கையில் வளம்பெறாத ஒருசில வழக்கறிஞர்களுக்கு வசதியளிப்பதற்குப் பயன்படுகிறது என்று கூறினால்கூட மிகையாகாது. மேலும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளைப் போக்கவும் மலிவாகவும் வசதியாகவும் வீடுகள் கிடைக்கவும் இச்சட்டம் வழிகாட்டவில்லை. அதனால்தான் இந்தத் திருத்தம் மட்டும் போதாது. நல்லமுறையில்—மாற்றமும் வேண்டும் என்று கோருகிறேன்.

"சென்னையில் நாளுக்குநாள் அலுவலகங்கள் அதிகரித்துவருகின்றன; இதனால் ஓரளவிற்கு வீட்டு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உடனடியான அலுவல்களில் ஈடுபட்டுவுள அலுவலங்களைத் தவிர, மற்ற அலுவலகங்களை நகரத்திற்கு வெளியே—வெளியூர்களுக்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

மலைத்தோட்ட முதலாளிகளுக்கு அதிக வரி

சட்டசபையில் எம். பி. சுப்பிரமணியம் பாராட்டு

சென்னை, ஜூலை 24—

சென்னை அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுசெய்ய தோட்ட முதலாளிகளின் விவசாய வருமான வரியை உயர்த்தி நிதி அமைச்சர் அறிவித்த திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இன்று சட்டசபையில் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

இந்தத் திருத்தத்தை ஆதரித்து தி. மு. க. சட்டசபைக் கட்சிச் செயலாளர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தனிப்பட்ட முதலாளிகள் அடைந்துவரும் கொள்ளை இலாபத்தில் அரசாங்கம், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அதிக பங்கு பெற தைரியமாக முன்வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

"தோட்ட முதலாளிகளிடம் ஓரளவுக்கு அதிக வரி பெற ஈடுபட்டுள்ளது, அவர்களை எந்த வகையிலும் பாதிக்காது.

"இந்தத் திருத்தத்தை நான் முழுமனதுடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்கிறேன்.

"இந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தை தவறாகக் கருதிக்கொண்டும், வேண்டுமென்றே குறைகூறுபவர்களுக்கும் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுமக்களை பாதிக்காத முறையில், தாங்கக்கூடியவர்களிடம் வரி விதித்து, அதிக வருமானம் பெறுவதற்கு அரசாங்கம் முற்படும் எந்தத் திட்டத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயம், தயங்காது பாராட்டும்—வரவேற்கும் என்பதை உணர வேண்டுகிறேன்.

"தோட்ட முதலாளிகள் மீது மேலும் வரியை உயர்த்தினால் கூட தி. மு. கழகம் அதை ஆதரிக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்."

அமைச்சர் மாணிக்கவேலர் பதிலளிக்கையில், மேலும் அதிக வரி வசூலிப்பது பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்றும், இப்போது விதிக்கப்பட்டுள்ள வரியே போதுமானது என்றும் கூறினார்.

★

தென்னாற்காடு பகுதிக்கும் சட்டத்தை விரிவாக்குக!

ஏ. கோவிந்தசாமி வேண்டுகோள்

அமைச்சரின் பிரேரணையின் மீது தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"வீட்டு வாடகைச் சட்டம் சென்னை நகரத்திற்கு மட்டுமே பொருந்தும்; எனவே, இந்தச் சட்டத்தை நெய்வேலி பகுதியிலும், விருத்தாசலம், நெல்லிக்குப்பம் பகுதியிலும் விரிவுபடுத்தி, மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—7—57 சனி

வாழ்த்துகிறோம்!

டுனீஷியா ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

அண்மையில்தான் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்ற வட ஆப்பிரிக்க நாடு, டுனீஷியா. இங்கு கடந்த 250 ஆண்டுக்காலமாக நிலவி வந்த முடியாட்சிக்கு, டுனீஷிய அரசியல் நிர்ணய சபையின் குடியரசுப் பிரகடனம் ஒரு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

'சுதந்திரம் பெற்றதும், முழு ஆட்சி உரிமையும் மக்களிடத்திலேயே இருக்கவேண்டும்' என்ற இயற்கையான நல்லார்வத்தோடு, டுனீஷியாவுக்கு விடுதலைப் பெறப் போராடிய சுதந்திரக் கட்சியினர், குடியரசுப் பிரகடனத்திற்கு வழிகோலியிருப்பதை, அந்த நாட்டு மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலுமுள்ள விடுதலை விரும்பிகள் பெருமகிழ்ச்சியோடு வரவேற்பர்.

டுனீஷியாவில், இப்போதுதான் ஜனநாயக வாழ்வுமுறைக்கான விதை தூவப்படுகிறது— குடியரசுப் பிரகடனத்தின் மூலம்! அந்த நாட்டு மக்கள், மிகுந்த கவலையோடும், பொறுப்புணர்ச்சியோடும் தாங்கள் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், உண்மையான ஜனநாயக மலர்ச்சியை அனுபவிக்கவும் தங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

ஹபீப் பர்கூபா, அரசியல் நிர்ணய சபை மூலம் குடியரசின் முதல் தலைவராகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறார். இதுவரை நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த இவர் தலைமையில் இயங்கும் தேசியக் கட்சிதான், விடுதலைக்காகப் போராடிய பிரதான கட்சியாகும்.

குடியரசுப் பிரகடனத்தை வெளியிட்ட நேரத்தில், அரசியல் நிர்ணய சபை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் ஹபீப் பர்கூபா, 'மன்னரையோ அவரது குடும்பத்தையோ பழிவாங்கும் நோக்குடன் நடத்தமாட்டோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். இது, அவருக்குள்ள பொறுப்புணர்ச்சியைக் காட்டுவதாக இருக்கிறது. ஆனால், சபையில் பேசிய பல பிரதிநிதிகளும் மன்னரைக் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கின்றனர். இதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில், அண்டையிலிருக்கும் நாடு மொராக்கோ; அங்கும் முடியாட்சிதான் நிலவியது, பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடிப்பின் கீழ்! ஆனால் அந்த நாட்டில் முடிதரித்திருந்த சிதி முகம்மது பென்யூசுப் என்ற மன்னன், மொராக்கோவின் விடுதலைக்காக மக்களுக்குத் தலைமை தாங்கிப் போராட்டம் நடத்தினான்; அந்த நாட்டின் தேசியத் தலைவனானான்; சிம்மாசனத்திலிருந்து பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால் கீழ் இறக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டான்; அப்போதுகூட மக்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. அதனால், சுதந்திரம் பெற்ற பின்பும்—இன்றும் அந்த மக்களை வழிநடத்திச் செல்லும் பெருமைக்குரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறான். இந்த உண்மையையும், தங்கள் நாட்டு மன்னன் தங்களை அடிமை கொண்டிருந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் எடுபிடியாக—கைப்பொம்மையாக இருந்தானே என்பதையும் ஒருசேர எண்ணிப்பார்க்கும் டுனீஷிய மக்கள் ஆத்திரப்படுவதில் நியாயம் நிரம்ப உண்டு. ஆனால் முடியைப் பறித்த பின்னர், 'செத்த பாம்பை அடிக்க வேண்டாம்' என்று, பர்கூபா, விவேகத்துடன்தான் கூறியிருக்கிறார்.

டுனீஷிய மக்கள் சுதந்திரம் பெறுவதற்காக மகத்தான தியாகங்களைப் புரிந்திருக்கிறார்கள்; தங்களுடைய உரிமையைப் பெற, அநியாய விலை தந்திருக்கிறார்கள். அவர்கள், கிடைத்த சுதந்திரத்தை முழுமைபெறச் செய்வதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளின் முதல் கட்டம்தான், குடியரசுப் பிரகடனம்! தங்களுடைய வெற்றி கண்டு பெருமையும், மகிழ்ச்சியும் அடையும் டுனீஷிய மக்கள், குடியரசு பெயரளவில் அமைந்துவிடாமல் உண்மையான குடியரசாக மலர்ந்து தங்களுக்குப் பாதுகாப்பான நல்வாழ்வைத் தருமாறு உன்னிப்புடன் கவனித்துக்கொள்ள வேண்டும். இன்று மக்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பேற்றுள்ளவர்கள் விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களிடம் காட்டிய விசுவாசத்தில் துளியும் குறையாத அளவு நடந்து கொள்வார்களேயானால், டுனீஷியாவின் எதிர்காலம் சிறப்புறும் என்பதில் ஐயமில்லை.

டுனீஷியா குடியரசாக மலருவது, உலகெங்கிலும் உள்ள விடுதலை விரும்பிகளுக்கு பெருமகிழ்ச்சியைத் தருவதாகும்.

தாயகத்தின் விடுதலைக்காக நம்மை ஒப்படைத்துவிட்ட நாம், இந்த மலர்ச்சியில் புதிய உற்சாகமும், தெம்பும் பெறுகிறோம். அந்த வகையில், 'டுனீஷியக் குடியரசு வாழ்க' என வாழ்த்துகிறோம்!

சென்னையின் திட்டத்திற்கு டில்லி கைவிரிப்பு!

சட்டசபையில் அமைச்சர் தரும் தகவல்

1951-ம் ஆண்டில் வேதாரண்யம்—நாகப்பட்டினம் கால்வாயை அபிவிருத்தி செய்ய ரூ. 7 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதாம்.

இந்தத் தொகையை ஒதுக்குமாறு சென்னை அரசாங்கம் டில்லி எசமானர்களைக் கேட்டிருந்ததாம் டில்லி கைவிரித்துவிடவே, திட்டத்திற்கு சமாதி கட்டி விட்டனராம்!

'இந்தத் திட்டம் அவசியமாதலால், உதவி தருமாறு கோரி மத்திய சர்க்காருக்கு மீண்டும் சென்னை சர்க்கார் எழுதியிருக்கிறது' என்று சட்டசபையில் கேள்வி நேரத்தில், தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மூடுவிழாவில் முன்னேறிவிட்டனர்!

சென்னை, ஜுலை 24—
கடந்த இரண்டு ஆண்டுகளில் 91 கிராமங்களிலிருந்த வைத்திய விடுதிகள் மூடப்பட்டனவாம்!

தோழர் ஏ. கோவிந்தசாமி:— "போதிய டாக்டர்கள் இல்லாத காரணத்தினால் ஏழைகளுக்கும், கிராம மக்களுக்கும் பயன்படும் வைத்திய விடுதிகளை மூடுவதானால், ஏன் மீண்டும் எல். எம். பி. படிப்பை ஆரம்பிக்கக்கூடாது."

அமைச்சர்:—"இந்தப் பிரச்சினை வேறானதாகும்."

எண்ணூர் கடற்கரை மணல்

புதிய உபயோகம்

சென்னை நகரின் வட கிழக்குப் பகுதியில் எண்ணூர் அருகே, வங்காளகுடாக் கடல் கரையில் பரவிக்கிடக்கும் மணல், சிமெண்டு தயாரிப்பில் ஒரு சோதனைக்கட்ட வேலைக்குப் பயன்படும் என்று காணப்பட்டிருக்கிறது.

இந்த மணல், சென்னை மாநில காங்கிரீட் மற்றும் மண் ஆராய்ச்சி நிலையத்தில் சோதனை செய்யப்பட்டபோது, எண்ணூர் மண் புது உபயோகத்திற்குப் பயன்படும் என்று காணப்பட்டது.

இதுகாறும், சிமெண்டு சோதனைக்காக, இங்கிலாந்திலிருந்து இந்தவகை மண் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. ஒரு டன் மணல், ரூ. 940 செலவில் இறக்குமதியாகி வந்தது. ஆனால் எண்ணூர் மணல் ரூ. 450 மட்டுமே விலையாகும் என்றும், அதனால் டன் ஒன்றுக்கு ரூ. 490 வரை மிச்சப்படும் என்றும் தெரிகிறது.

இந்தியாவில் தொழில் துறைத் தகராறுகள்

மேலும் அதிகரிப்பு?

1957 மே மாதத்தில் தொழில் துறைத் தகராறுகள் காரணமாக 4,02,769 நபர்-நாட்கள் நஷ்டமேற்பட்டதாம்! இதற்கு முன்னைய மாதத்தில் 3,84,552 நபர்-நாட்களே நஷ்டமாயினவாம்!

'பரிசீலனை மாதத்தில் 143 தகராறுகள் நீடித்து வந்தன; தகராறுகள் கதவடைப்புகள் காரணமாக ஏற்பட்டவை ஆகும். இவற்றில் மொத்தம் 12,437 தொழிலாளர் சம்பந்தப்பட்டிருந்தனர். இவற்றில் சென்னையில் 3 கதவடைப்புகளும், மைசூரில் 2 கதவடைப்புகளும் ஏற்பட்டன' என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

போலீஸ்காரர்கள் சங்கம் அமைக்கக்கூடாதாம்

சென்னை, ஜுலை 24—
சென்னை நகரில் உள்ள போலீசார் முன்பு அமைத்த சங்கம் அவர்களை ஒழுங்கற்று நடக்குமாறு செய்ததாகவும், எதிர்காலத்தில் அவர்கள் மீண்டும் அந்தச் சங்கத்தை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் சட்டசபையில் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

குறைந்தபட்ச ஊதிய நிர்ணயக் குழு சிபாரிசு

அமுல் நடத்தப்படுமாம்

சென்னை, ஜுலை 25—
குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கான சிபாரிசுகள் செய்ய நியமிக்கப்பட்ட குழு, அதுபற்றி ஆராய்ந்து, ஆவன செய்துள்ளதாகவும், குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் சட்டசபையில் தொழில் அமைச்சர் தெரிவித்தார்.

'தேசீய சிறுபான்மையினர் மொழி'

இலங்கையில் தமிழுக்குக் கிடைக்கும் அந்தஸ்து

பண்டா — தமிழரசுக் கட்சி கூட்டு அறிக்கை

ஆகஸ்டு போராட்டம் கைவிடப்படும்

கொழும்பு, ஜுலை 25—
இலங்கையில் தமிழரசுக் கட்சியினர் ஆகஸ்டில் நடத்த உத்தேசித்திருந்த போராட்டம் கைவிடப்பட்டது.

இலங்கைப் பிரதமர் தமிழரசுக் கட்சியினரை அழைத்து நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக இந்த சுமுக முடிவு ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மொழிக்கு, 'தேசீய சிறுபான்மையினரின் மொழி' என்ற அந்தஸ்து தரப்படும் என்றும், இதனால் சிங்கள மொழியின் தேசீய அந்தஸ்து குன்றாது என்றும், தமிழ் வழங்கும் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே ஆட்சி மொழியாக இருக்கும் என்றும், சர்க்காரும் தமிழரசுக் கட்சியினரும் சேர்ந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கை கூறுகிறது.

பிரதேச சுயாட்சிக்கும் வழி காணப்பட்டிருக்கிறது. அதிகாரங்கள் பரவலாக்கப்படும் என்றும், பிரதேச கவுன்சில்கள் அமைக்கப்பட்டு அவைமூலம் நிர்வாகம் நடத்தப்படும் என்றும் அறிக்கை கூறுகிறது.

சேரிகள் சீர்திருத்தம்

கூவம் நதிப் பகுதியில் வாழும் மக்கள் பற்றி க. அன்பழகன்

சென்னை, ஜுலை 24—
"நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 3 சேரிகள், ரூ. 71,233 செலவிலும், சென்னை நகரசபையின் திட்டங்கள்மூலம் 68 சேரிகள் ரூ. 1,38,000 செலவிலும் சீர்திருத்தப்பட்டுள்ளன" என்று சட்டசபையில், தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் தெரிவித்தார்.

தோழர் க. அன்பழகன்:— "கூவம் நதிப் பகுதியில் உள்ள சேரிகளில்வாழும் மக்கள்குளிர் தாங்காமல்—குடியிருப்பு வசதியில்லாமல் கஷ்டப்படுவதைக் குறித்து அரசாங்கம் என்ன செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறது?"

அமைச்சர்:— "எங்கெங்கு அதிக நெருக்கடி உள்ளதோ அங்குதான் திட்டம் முதலில் அமுல் நடத்தப்படுகிறது. இதன்படி, கூவம் நதிப் பகுதியில் வாழ்வோரின் புனர்வாழ்வுத் திட்டமும் கவனிக்கப்படும்."

"இப்போதுள்ள இடங்களில் மேலும் தேவையான சுகாதார வசதியளித்து சேரியில் வாழும் ஏழை மக்களுக்கு உதவி அளிக்க அரசாங்கம் முன்வருமா?" என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர், 'ஆவன செய்வதற்குத் திட்டம் இருக்கிறது' என்று கூறினார்.

நல்லதை ஏற்க மறுக்கும் நாகரீகம்!

சென்னை, ஜுலை 26—
பதிவு இலாகாவில் அவசியமான தஸ்தாவேசுகளைப் புகைப்படக் கருவி முறையில் நிலைத்திருக்கச் செய்யவேண்டியதின் அவசியத்தை பல உறுப்பினர்கள் சட்டசபையில் எடுத்துரைத்தும், சில சமயங்களில் மாதிரி நகல்வேண்டும் என்று பொதுமக்கள் கேட்கும்போது எழுதித் தருவதின் காரணமாகப் பல குற்றங்கள் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டியும், இந்த முறையை பம்பாய் மாநிலம் நடைமுறையில் வைத்திருப்பதை எடுத்துக்காட்டியும் கூட, அமைச்சர் இராமய்யா, புகைப்படக் கருவி முறையை பதிவு இலாகாவில் புகுத்த மறுத்துவிட்டார்.

ரூ. 100 கோடி கடன் எழுப்ப டெல்லி முடிவு

ரூ. 100 கோடிவரை பெறுவதற்காக டெல்லி சர்க்கார் இரண்டு கடன் எழுப்புகிறார்கள்.

ஒன்று $3\frac{3}{4}$ சதவிகித வட்டி வீதமும், மற்றது 4 சதவிகித வட்டி வீதமும் கடன்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

'பலமான அடி கிடைக்கும்'

கிருஷ்ணமேனன் தரும் எச்சரிக்கை

புதுடில்லி, ஜுலை 25—
"எவரேனும், ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் 1947-ம் ஆண்டில் நுழைந்ததுபோல, இப்போது இந்த நாட்டிற்குள் காலடி எடுத்து வைத்தால், அவர்கள் தருவதைவிட பலமான அடி தருவோம்"

என்று, தற்காப்பு இலாகா மந்திரி வி. கே. கிருஷ்ண மேனன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"அமெரிக்காவின் இராணுவ உதவி கிடைக்கிறது என்பதால், பாகிஸ்தானின் இராணுவ பலம் பெருகியிருப்பது எங்களுக்குத் தெரியும்; அந்தக் காரணத்திற்காக நாங்களும், அண்டை நாடான பாகிஸ்தானுக்குச் சமமான இராணுவ பலத்தைப் பெற முயற்சிப்போம் என்று எவரும் கருத வேண்டாம்; அது எங்கள் கொள்கை அல்ல. எங்கள் இராணுவத்தின் தரத்திலும், மக்களின் ஒற்றுமையிலும் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது" என்றும் கிருஷ்ணமேனன் கூறியிருக்கிறார்.

கூண்டிலடைபட்டிருக்கும் காஷ்மீர் சிங்கம்!

இந்த ஆண்டு இறுதியில் விடுதலை பெறலாம்?

'காஷ்மீர் சிங்கம்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் முன்னாள் பிரதமர் ஷேக் முகம்மது அப்துல்லா, இந்த ஆண்டு இறுதிக்குள் விடுதலை செய்யப்படலாம் என்று ஒரு தகவல், புதுடில்லி அரசியல் வட்டாரங்களிலிருந்து தரப்படுகிறது.

'காஷ்மீரை ஒரு தனிச் சுதந்திர நாடாக்க முயற்சித்தார்' என்று குற்றம் சாட்டப்பட்டு 1953-ல் கைது செய்யப்பட்ட ஷேக் அப்துல்லா, இன்றுவரை எவ்வித விசாரணையும் இன்றி சிறையில் வாடுவது தெரிந்ததே.

ஷேக் அப்துல்லாவைக் கைது செய்து சிறைப்படுத்தியவர், அன்று உதவிப் பிரதமராக இருந்தவரும் இன்று பிரதமராக இருப்பவருமான பக்ஷி குலாம் முகம்மதுதான்.

இந்த பக்ஷி குலாம் முகம்மதுதான், இப்போது, ஷேக் அப்துல்லாவை விடுவிப்பதுபற்றி டெல்லி சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறாராம்!

இப்போது காஷ்மீரின் அரசியல், பொருளாதார இணைப்பு முன்னேறிவிட்டது என்பதால், ஷேக் அப்துல்லா விடுவிக்கப்படுவதால் நிர்வாகத்திற்கு எந்தவிதத் தீங்கும் நேரிடாது என்று பக்ஷி குலாம், மற்றும் டெல்லி சர்க்காரும் கருதுகிறார்களாம்!

இப்போதுபோலவே இந்த ஆண்டு இறுதிவரை நிர்வாகம் சீர்பட நடைபெறுமானால், இந்த ஆண்டு இறுதியில் ஷேக் அப்துல்லா விடுவிக்கப்படுவார் என்று அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றனவாம்.

கிராம மக்களுக்குத் தரப்படும் மருத்துவ வசதி போதுமானதுதானா?

நாட்டு மருத்துவர்களை அரசாங்கம் ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?

சட்டசபையில் தோழியர் சத்தியவாணிமுத்து கோரிக்கை

சென்னை சட்டசபையில், மருத்துவத்துறை மானியத்தின் வெட்டுப் பிரேரணையை முன்மொழிந்து தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

"ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், மானியங்களின் மீது நாங்கள் கொண்டுவரும் வெட்டுத் திருத்தங்கள் வெற்றிபெறாவிட்டாலும், நாங்கள் கூறுகின்ற நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அதனை செயல் முறையில் அமுலாக்குமாறு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"மருத்துவத்தைப் பொறுத்த வரையில் அதிகமாகப் பணம் தேவையென்ற எண்ணம் இருந்தாலும், செய்யப்படுகின்ற செலவினங்கள் தேவையான செலவினங்களாக இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பமாகும்.

"கிராமங்களில் அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் ஏழை மக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் அமைந்திருக்கவில்லை என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள்கூட, ஒரு மருத்துவமனையில் பிறந்த குழந்தையை நாய் கவ்விச் சென்றதாக ஆதாரபூர்வமாக எடுத்துச் சொன்னார்; பிறக்கின்ற குழந்தையை நாய் கவ்விச் சென்றதற்கு மருத்துவமனை அதிகாரிகளின் கவனக் குறைவும் ஒரு காரணமாக இருக்கலாம்; பிறக்கின்ற குழந்தை, நாய் கவ்வுகின்ற அளவுக்குச் சிறியதாக இருப்பதைக்கூட அது காட்டுகிறது. அப்பேர்ப்பட்ட சிறிய உருவத்தையும், குறைந்த எடையையும் கொண்ட குழந்தை பிறப்பதற்குக் காரணம், இன்றுள்ள தாய்மார்கள் அவ்வளவு பலவீனர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு ஒருஎடுத்துக்காட்டாகவும் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட பலவீனம் வருவதற்குக் காரணம் —நான் வேடிக்கையாகச் சொல்லுவதாக நினைக்கக்கூடாது— நமது மாநிலத்தில் அதிகமாகக் குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கின்றன என்பதாகும்; எனக்கு முன்பு பேசிய அமைச்சரவர்களும் கூட இதனை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

"நாட்டிலே எந்தச் செல்வம் இல்லாவிட்டாலும்கூட குழந்தைச் செல்வத்தை நமக்கு 'ஆண்டவன்' ஏராளமாக அளித்திருக்கிறார் என்றும் அதற்கு ஆண்டவனுக்கு அஞ்சலி செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்கள். குழந்தையைப் பெற்றெடுக்கிறவர்கள் ஆணும்-பெண்ணும்தானே தவிர, 'ஆண்டவன்' அல்ல! 'நான் என்ன செய்வது? ஆண்டவன் அளித்த பிச்சை அல்லவா?' என்று கருதுகிறார்கள். குடும்ப கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென்ற நல்ல நீதி அவர்களுக்குத் தெரியவில்லை. அந்த நீதியைப் புகட்டுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அப்படிப் புகட்டுகின்ற அந்த முறை நல்லமுறையாக—உண்மையிலேயே பயன்தரக்கூடிய முறையாக இருக்க வேண்டும்.

"நாங்கள் சென்று நடத்துகின்ற சீர்திருத்த திருமணங்களில் மணமக்களை வாழ்த்தும்போது, 'அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாதீர்கள்; 2, 3 குழந்தைகளுக்குமேல் பெற்றுக் கொள்ளாதீர்கள்' என்று மனமுவந்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். காரணம், ஏழைகளுக்கு அதிகமாக குழந்தைகள் இருக்கின்றன; பணக்காரர்களுக்கு அதிகமாகக் குழந்தைகள் கிடையாது. காசி, இராமேசுவரம் சென்றாலும்கூட குழந்தை இல்லாத குறைபாடு அங்கே இருப்பதைக் காண்கிறோம்; வேண்டாத அளவுக்கு அதிகமாகக் குழந்தைகள் இங்கே இருப்பதைக் காண்கிறோம்.

"சர்க்கார் செய்கின்ற நல்ல காரியங்களில் எதிர்க் கட்சியாக இருந்தாலும் நாங்கள் ஒத்துழைப்போம். அப்பேர்ப்பட்ட நல்ல காரியங்களுக்கு என்றும் நாங்கள் ஆதரவு தருகிறோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

"சமீபத்தில்—என் நினைவு சரியாக இருக்ுமானால் 1955-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந் தேதி—பிரதமர் நேரு அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது, ஆற்றியதோர் நல்லுரையில், 'டாக்டர்கள் எண்ணிக்கை பெருகவில்லை; இன்றும் நூறாண்டுக் காலம் சென்றாலும்கூட நாம் விரும்புகின்ற அளவுக்கு டாக்டர்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்ய முடியாது; எனவே, குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்பட்ட டாக்டர்கள் நாட்டிற்குத் தேவை; அதன்மூலம் ஓரளவுக்கு கிராமப் பகுதியில் வாழும் மக்களுக்கு சிகிச்சை தரமுடியும். Auxilary Medical Service மூலமாக நம் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்' என்று, பேசியிருப்பதாக எனக்கு நினைவுக்கு வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திற்குள் நாம் எதிர்ப்பார்ப்பது 90,000 டாக்டர்கள் தேவை என்பதாகும்; ஆனால், 1961-ம் ஆண்டில்கூட நாம் அந்த எண்ணிக்கையை எட்டிப்பிடிக்க முடியாது என்றும், எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் 82,000-க்கு மேலாக முடியாது என்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் புள்ளி விவரங்களில் காணப்படுகிறது. அதே போல், தாதிமார்கள் (நர்சுகள்) நாம் எண்ணுகின்ற அளவுக்கு 80,000 தேவையாகஇருந்தாலும், 32,000 பேர்தான் கிடைப்பார்களே தவிர, அதற்குமேல் நம்மால் ஆகாது என்று புள்ளி விவரங்களில் அவர்களே சொல்லுகிறார்கள். ஆகவே, டாக்டர்கள் நர்சுகள் இல்லாத குறையைப் போக்கவேண்டுமானால், இன்றைக்குக் கிராமங்களில் பலவித முறைகளில் மருத்துவப் பயிற்சி பெற்றவர்கள்—ஏழைகளுக்கு நல்லமுறையில் மருத்துவம் செய்பவர்கள் உள்ளனர்—அவர்களை இத்துறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"இதில் பலர் இந்திய முறைப்படியும், பலர் தமிழ் நாட்டு முறைப்படியும் மருத்துவத் துறையில் பயிற்சி பெற்று ஏழை மக்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். அவர்கள் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் பயங்கர அளவில் வந்த 'இன்புளுயன்சா' நோய்க்கு அதிகமான முறையில் அவர்கள்தான் சிகிச்சை அளித்தார்கள் என்பதை நாம் குறிப்பாகக் கவனிக்கவேண்டும்.

"சமுதாயநலத் திட்டத்தின் கீழ்ம்பலமருத்துவமனைகள்நடந்து வருகின்றன. இதுதவிர சில இடங்களில் சரியான விதத்தில் டாக்டர்கள் வேலை செய்வதில்லை என்று தெரிகிறது; அதாவது, பெரம்பலூர் தாலுகாவில் பூலம்பாடி கிராமத்திலுள்ள குஷ்டரோக மருத்துவ மனையில் இருந்த டாக்டர் சரியாக வேலை செய்யாமல், 4மாதங்கள் கணக்கு எழுதி சம்பளம் வாங்கினார் என்ற காரணத்திற்காக அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டாரென்றும், இப்போது அந்த நிலையம் மூடப்பட்டு இருப்பதாகவும், அந்த இடங்களிலுள்ள வைத்தியர்கள், மக்கள் சேர்ந்து 7—5—57-ல் இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு மகஜர் தந்திருந்தும் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், அதை இந்த வைத்தியர்களைக் கொண்டு சரிவர நடத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர்கள் அக்கோரிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்; அமைச்சர் இதுவரையில் அதற்குப் பதில் தரவில்லை என்றும் நினைக்கிறேன்.

"இன்று 'இண்டிஜினஸ்' என்ற முறையை மாற்றி 'இன்டெகிரேட்டெட்மெடிசின்ஸ்என்றுள்ள பயிற்சியைப் படித்து தேர்ச்சி பெறுகின்ற மாணவர்களுக்கு சர்க்கார் மருத்துமனைகளில் வேலை கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. அதே மாதிரி, அலோபதியும் சித்த வைத்திய முறையும் ஒன்றாகச் சேர்த்து நடத்தப்படுகிற பயிற்சியில் எப்படி எம். பி. பி. எஸ். மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதோ அதேமுறையில் நடத்தப்படுகிற பயிற்சியில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு அரசாங்கத்தாரால் நடத்தப்படுகின்ற மருத்துவ மனைகளில் வேலை இல்லை என்று கூறி வருகிறார்கள். ஆகவே இந்தமுறை மாற்றப்பட வேண்டும் என்றும், இதற்கு அரசாங்கம் பதில் தரவேண்டும் என்றும் அவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

"அதே போன்று இன்று எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிகள் போன்று, ஜி.சி.எம். படிக்கும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்ற முறை இருப்பது வருந்தத் தக்கதாகும். எம்.பி.பி.எஸ். மாணவர்கள் வருடம் ஒன்றுக்கு ரூ. 240 கட்டுகிறார்கள் என்றாலும், இப்போது ரூ. 20 வரை கட்டிக்கொண்டிருக்கின்ற இந்த ஜி.சி.எம். படிக்கும் மாணவர்களும் ரூ. 240 கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கும் இதே போன்று பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்று அந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். அந்தக் கோரிக்கையை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"அடுத்ததாக, 'ஹோமியோபதி'யைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அதாவது, இன்று நாட்டில் 'ஹோமியோபதி' என்றால், 'கடுகு போன்ற மாத்திரையை மாத்திரம் கொடுக்கும் வைத்தியமதானே?' என்று எள்ளி நகையாடக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்த 'ஹோமியோபதி' என்பது ஜெர்மனியில் ஹாரிமன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு இன்று உலகம் எங்கும் புகழ் பெற்று விளங்கிவருகிறது. அறிந்தோ அறியாமலோ இதைப்பற்றித் தவறாகக் கருதுகிறார்கள். ரஷ்யாவைப் பார்த்துப் பாடம் படிக்க வேண்டும் என்று சொல்வதாகக் கருதக் கூடாது; அங்கு இந்த மருத்துவ முறையை—குறிப்பாக 'ஹோமியோபதி' முறையை மிகவும் சிறந்த முறையில் கையாண்டு பலவித நோய்களுக்கும் சிகிச்சை செய்து வருகிறார்கள் என்று நமக்குத் தெரியவருகிறது. அலோபதியின் மூலம்கூட குணப்படாத பெரும் நோய்கள் இதனால் தவிர்க்கப்படுகின்றன என்று அங்கிருந்து வருகின்ற குறிப்புகள் கூறுகின்றன. அமைச்சரவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள்—'பல நாடுகளுக்கும் மருத்துவ முறைகளைக் கண்டுபிடிப்பதற்காக பல தூதுக் குழுக்கள் அனுப்பப்படுகின்றன'—என்று.

"நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன் - இந்த 'ஹோமியோபதி' முறையைப் பற்றி ரஷ்யாவிலிருந்து தெரிந்துகொள்வதற்கு இங்கிருந்து ஒருவரை அனுப்பவேண்டுமென்று! அதன் பின், இதனுடைய பெருமையை உணர்ந்தாவது இதற்கு அங்கீகாரம் அளிக்கவேண்டும்.

"இன்று மத்திய சர்க்காரிலிருந்து எல்லாவற்றையும் எதிர்பார்க்கின்ற நாம், இதற்கு அங்கீகாரம் அளிக்காவிட்டாலும்கூட,

(4-ம் பக்கம் பார்க்க)

பத்து ஆண்டுகள் பணியாற்றியும் 'கூலி'கள் என்ற நிலை ஏன்?

உழைத்துக் கிடைக்கும் ஊதியத்தால் வாழ்பவர்களை அடிக்கடி விரட்டியடிப்பதேன்?

சட்டசபையில் எம். பி. சாரதி கோரிக்கை

சென்னை சட்டசபையில் தொழிலாளர் மானியத்தின்மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து கழக உறுப்பினர் தோழர் எம். பி. சாரதி அவர்கள் பேசியதாவது:—

"வேலூரில் மட்டும் 10,000-க்கு அதிகமான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குறைகளை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிவிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன்.

"பத்து ஆண்டுகளுக்கு முன்பு தொழிலாளர்களின் குறைகளையும்முதலாளிகளின்குறைகளையும் நேரடியாகத் தீர்த்துவந்தார்கள். இப்போது கிளை அமைப்புகள் (பிராஞ்சு முறை) ஏற்படுத்தப்பட்டு தொழிலாளர்களுக்கும்—முதலாளிகளுக்கும் தொடர்பற்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. கிளைகளுக்கும் — முதலாளிகளுக்கும் நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கும் —முதலாளிகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படவேண்டும்; அல்லது இப்போது நீடிக்கும் கிளை அமைப்பு முறையில் தொழிலாளர்களுக்கும் — முதலாளிகளுக்கும் நல்லுறவு ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

"வேலூரில் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்த நல்ல இடங்கள் இருக்கின்றன. பல முதலாளிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் 10,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களை வைத்து பீடி தயாரிக்கலாம். இப்போது சிறு கிளைகளில் இட நெருக்கடியும், சுகாதாரக் குறைவும் உள்ளன.

"அடுத்து, பஸ் போக்குவரத்தில் வேலை செய்யும் ஊழியர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். தனிப்பட்டவர்களின்கீழ் வேலை செய்யும் பஸ் தொழிலாளர்கள் காரணமின்றியும், சிறு காரணங்களுக்காகவும், அநியாயமாக வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். இரண்டு மூன்று திங்கள் வேலை செய்த பின்னரும்கூட, வேறு ஆட்களை வைக்கவேண்டும் என்று முதலாளிகள் கருதி, பழைய ஆட்களைத் திடீரென்று நீக்கிவிடுகிறார்கள்.

"இப்படிப் பல முதலாளிகள், தங்கள் விருப்பப்படி எதை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் செய்வதற்கு உரிமையிருக்கிறது; அதனால், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பில்லை. எனவே, அவர்களுடைய குறைகளை ஆராய ஒரு குழுவை நியமித்து உடனடியாக ஆவன செய்யவேண்டும். பஸ் தொழிலாளர்களுடைய குறைகளைப் போக்க ஒரு சட்டம் கொண்டு வந்தால்கூட நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

"இரண்டு மூன்று குமஸ்தாக்கள் இருந்தாலும் கடையைத் திறந்துவைக்கலாம் என்று, கடைச் சட்டத்தைத் திருத்திவிட்டார்கள்; இதனால் குமஸ்தாக்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது.

"ஓரிரண்டு முதலாளிகள் இவ்விதமாக கடைகளைத் திறந்து வைத்திருப்பதைப் பார்த்து மற்ற வியாபாரிகளும் தங்கள் தங்கள் கடைகளைத் திறந்து வைப்பதற்கு முற்படுகிறார்கள். அங்குள்ள குமஸ்தாக்களும் கடைக்கு வரவேண்டியதாக இருப்பதால் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே 'மூன்று பேர்கள் உள்ள கடைகளையும் வாரத்திற்கொருமுறை மூடித்தான் தீரவேண்டும் என்று பழையபடியே கடைச் சட்டத்தைத் திருத்தினால் நலமாக இருக்கும்.

"இதைத் தவிர, தோல் பதனிடும் தொழில்லாளர்களின் வேலையைப் பொறுத்தவரையில் அடிக்கடி முதலாளிகள் 'தேவையான சரக்கு கைவசம் இருக்கிறது; நீங்கள் வேலைக்கு வேண்டாம்' என்று கூறிவிடுகிறார்கள். இந்த தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நாள்தோறும் உழைத்தபின் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டுதான் வாழ வேண்டியுள்ளது.

"இப்படிப்பட்டவர்களை முதலாளிகள் அடிக்கடி 'வேலையில்லை' என்று விரட்டினால், அவர்கள் என்ன செய்வார்கள்? எப்படி வாழ்வார்கள்? அன்றாடப் பிழைப்புக்கே அந்த ஏழைகள் அடிக்கடி கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கைவசம் அதிக சரக்கு (ஸ்டாக்) இருக்கிறது என்று கூறி, தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க முடியாதபடி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"பல நகரங்களில், நகரசுத்தி தொழிலாளர்கள் பத்து ஆண்டுகளுக்கு அதிகமாகப் பணியாற்றியிருந்தும் 'கூலி' ஆட்களாகவே இருந்துவருகிறார்கள். நகரசபைகளும் இதைப்பற்றி கவனிக்காமல் இருக்கிறது.

"வேலூரைப் பொறுத்தவரையில் 5 ஆண்டுகளுக்கு அதிகமாக உழைத்தவர்கள் சுமார் 400-500 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் கூலியாட்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தக்க ஊதியமும், நகரசபை ஊழியர்களுக்கான அந்தஸ்தையும் கொடுத்து, தேவையான பாதுகாப்பும், வசதிகளும் செய்துதரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

பத்திரிகை எழுத்தாளர் சங்கப்

பொதுச் செயலாளர்

'இந்து' இதழ் நிர்வாகிகள் வெளியேற்றி விட்டதேன்?

எம். பி. சுப்பிரமணியம், க. அன்பழகன் கேள்விகள்

சென்னை, ஜுலை 25—

சென்னை மாநில பத்திரிகை எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக உள்ளவர், 'இந்து' (ஆங்கில தினசரி) நிர்வாகத்தில் பணியாற்றுபவர்; அவர், தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி 'அரசாங்கத்திற்கு இதுபற்றி தெரியுமா? தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?' என்று சட்டசபையில், தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோர் கேள்வி ஒன்று எழுப்பினர்.

சங்கத்தின் செயலாளர் வேலையினின்றும் நீக்கப்பட்டது அரசாங்கத்திற்குத் தெரியும் என்றும், இது சம்பந்தமாக 'அட்ஜுடிகேஷன்' மூலம் நியாயம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் பதிலளித்தார்.

ஏன் இந்த நிலை?

சென்னை, ஜுலை 25—

சென்னை மாநிலத்தில் மொத்தம் 4,06,734 ஏக்கர் நிலம் பயிரிடப்படாமல் உள்ளது என்றும், இதில் 73,261 ஏக்கர் நிலம் மட்டுமே விவசாயத்திற்கு ஏழைகளுக்குத் தரப்படுகிறது என்றும் ரெவினியூ அமைச்சர் சட்டசபையில் தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூரில் கூட்டுறவு முறையில் பண்ணை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

"சில இடங்களில் கணக்குப் பிள்ளைகள் இலஞ்சம் வாங்கிக்கொண்டு நல்ல மேய்ச்சல் நிலங்களைக்கூட தரிசு நிலங்களாக மதிப்பிடுவதைத் தடுக்க அந்தப் பகுதி எம். எல். ஏ.க்களை கலந்து அத்துறையில் ஆவன செய்ய அரசாங்கம் முன்வருமா?" என்று தோழர் எஸ். எம். அண்ணாமலை கேட்டபோது, அமைச்சர், 'புகார்களை நம்பிக்கையான முறையில் தரவேண்டும்' என்று பதிலளித்தார்.

தவறைத் திருத்திக்கொள்ள

அமைச்சர் வெட்கம்?

'மலைத் தோட்ட முதலாளிகள் மீது விதிக்கப்படும் வரியை மேலும் உயர்த்தினாலும் தி. மு. கழகம் ஆதரிக்கும்' என்று சட்டசபையில் தோழர் எம். பி. சுப்பிரமணியம் கூறிய யோசனையை ஏற்க மறுத்து அமைச்சர் மாணிக்கவேலர் பேசுகையில், 'பாத்து பொன்முட்டை இடுகிறது; ஆனால், பாத்தைக் கொன்றுவிட்டால் முட்டை இடாது' என்றார்.

இந்த நேரத்தில் தோழர் க. அன்பழகன் குறுக்கிட்டு, 'பாத்து அல்ல' 'வாத்து' என்று திருத்தினர்.

தவறைத் திருத்திக்கொள்ள முன்வாராமல் அமைச்சர் 'மதராசில் பாத்து என்றுதான் சொல்லுகிறார்கள்' என்று கூறி,

"அந்தப் 'பாத்தை' 'தாஜா'(!) பண்ணவேண்டியது அவசியம்" என்று மேலும் தொடர்ந்து கூறினர்.

உலா நிலையங்கள்!

சென்னை, ஜுலை 26—

சென்னை மாநிலத்தில் உலா நிலையங்கள் ஏற்படுத்துவதற்காக மத்திய அரசாங்கம் ரூ. 5,85,000 மட்டுமே ஒதுக்கியுள்ளது என்று சட்டசபையில் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

நெய்வேலியில் உரத்தொழிற்சாலை

கொள்கையளவில் மத்திய அரசாங்கம் சம்மதம்

சென்னை, ஜுலை 24—

ஆண்டு தோன்றும் 70,000 டன் நைட்ரஜன் சத்துள்ள இரசாயன உரம் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை நெய்வேலி பகுதியில் ஏற்படுத்துவதற்குக் கொள்கையளவில் மத்திய அரசாங்கம் சம்மதித்துள்ளதாக அமைச்சர் வெங்கட்ராமின் சட்டசபையில் தெரிவித்தார்.

அதிகச் சம்பளம் பெறும் அதிகாரிகள் எண்ணிக்கை

நிதி அமைச்சர் தகவல்

சென்னை, ஜுலை 26—

சென்னை மாநிலத்தில் மொத்தம் 900 அதிகாரிகள் மாதம் ரூ. 500-ம், அதைவிட அதிகமாகவும் சம்பளம் பெறுகின்றனர் என்றும், இவர்களின் செலவு மட்டும் ரூ. 9,79,900 என்றும் வெளிநாடுகளில் உயர்ந்த கல்விபெற 15 அதிகாரிகள் 1956—57-ல் அனுப்பப்பட்டனர் என்றும் சட்டசபையில் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

சத்தியவாணிமுத்து கோரிக்கை

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இன்றைக்கு டெல்லி அரசாங்கத்தின்கீழ் இருக்கும் ஒரிசா, மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் 'ஹோமியோபதி' முறை சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட அங்கீகாரமாவது இதற்கும் ஆக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"இன்னும் இதைப்பற்றிக் குறிப்பாகச் சொல்லப் போனால் இந்த முறையை கேலி செய்பவர்கள், 'இதைச் சுலபமாகப் படித்துக்கொள்ளலாம்' என்று எளிதாக நினைத்து விடுகிறார்கள். இதை எல்லோரும் படித்துவிடலாம் என்ற நினைப்புக்குப் பதிலாக 'இது ஒரு உயர்தரமான படிப்பு' என்ற முறையில் இதைக் கண்டு கேவலமாக எண்ணுகிறவர்களின் நினைவு மாறவேண்டுமானால், இதற்குப் போதுமான கல்லூரிகள் இருக்கவேண்டும்; நல்லமுறையில் பயிற்சி பெற்றவர்களைக்கொண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்விதம் பயிற்சி பெற்ற குழுவால் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்தால் நாட்டில் ஆயிரமாயிரம் ஏழைகளுக்கு நல்ல முறையில் மருத்துவம் அளிக்க முடியும்.

"அடுத்ததாக, 'ஹோமியோபதி' மருத்துவத்திற்கு 'ஸ்பிரிட்' தேவையாக இருக்கிறது; இந்த 'ரெக்டிபை ஸ்பிரிட்' இன்று யார் யாருக்கோ கொடுக்கப்படுகிறது. இதற்காக லாகிரி பொருள்களும் அதிகமாக விற்கப்படுகின்றன; இதனால், தேவைப்படுகிற 'ஸ்பிரிட்' டாக்டர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, இவர்களுக்கு இந்த 'ஸ்பிரிட்' ஏராளமாகக் கிடைப்பதற்கு அனுமதிக்கவேண்டும்; அல்லது அவர்களுக்குக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும்; அல்லது அவர்களுக்குச் 'சலுகை' கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"இப்பேர்ப்பட்ட முறையில்—ஏழை மக்களுக்கு நல்லமுறையில் மருத்துவம் செய்வதற்கு ஏற்ற முறையில் நிவாரணம் அளிக்கப்படுமானால் பெரும் உதவியாக இருக்கும்.

"ஹோமியோபதி முறையே சிறந்த மருத்துவ முறை; அதை சர்க்கார் உடனே அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

கழகக் கூட்டங்கள்

★

ஈரோடு:
காரைவாய்க்கால் திடல்
28—7—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
நாஞ்சில் கி. மனோகரன்
எஸ். அப்பாவு

★

சித்தோடு:
28—7—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர்:
நாஞ்சில் கி. மனோகரன்
எஸ். அப்பாவு

★

பழனி 11-வது வட்டம்:
மஜீத் திடல்
(சேக் கடைக்கு முன்புறம்)
28—7—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
எம். இராமநாதன்

★

களாம்பாக்கம்:
28—7—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ஜெ. ஆறுமுகம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
அலமேலு அப்பாதுரை
வா. சங்கரநாராயணன்
மா. செங்குட்டுவன்
தி. சு. கிள்ளிவளவன்

★

ஒரத்தநாடு வட்டம்—கருவழிக்காடு:
பிள்ளையார் கோவில் அருகில்
28—7—57 அன்று
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: வே. அருணாசலம்
பேசுவோர்.
எழில் நிலவன்
டி. எம். தயிலப்பன்
சா. கோவிந்தன்
வி. எஸ். பாண்டியன்
கிட்டப்பா
சா. இளஞ்செழியன்

★

கரூர்:
28—7—57 இரவு 7 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: கே. குழந்தைவேலு
பேசுவோர்:
க. அறிவழகன்
ஏ. அம்மையப்பன்
எம். கே. கரிகாலன்
எம். குழந்தைவேல் எம். சி.
ஏ. அன்பு

★

சேலம்—செவ்வாய்ப்பேட்டை:
மீனாட்சியம்மன் கோவில்
அருகிலுள்ள மைதானத்தில்
28—7—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ந. பிச்சை
பேசுவோர்:
முகவை ஆர். எஸ். பாண்டியன்
இ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

★

துறையூர்:
பிள்ளையார் கோவில்
மைதானத்தில்
28—7—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: கி. தர்மலிங்கம்
பேசுவோர்:
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
அன்பில்-தருமலிங்கம்
து. ப. அழகமுத்து
பி. ஆர். இரத்தினசாமி

★

வேலூர்—குயப்பேட்டை
கந்தசாமி ஜமேதார் தெருவில்
28—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்:
எம்.பி. சாரதி எம்.சி., எம்.எல்.ஏ.
பேசுபவர்:
டி. கே. சீனிவாசன்

★

ஒடுவன்குறிச்சி:
(இராசிபுரம் வட்டம்)
அரண்மனை சாவடிக்கு அருகில்
30—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. சின்னண்ணன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
சிற்றுளி-சுப்பிரமணியம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காஞ்சீபுரம் தொகுதி

பொதுநல மாநாடு

★

காஞ்சீபுரம் தொகுதி முன்னேற்றம் குறித்து வழிவகைகாண, மேற்படி பொதுநலமாநாடு

5—8—57 மாலை 5-மணிக்கு

தண்டலம் கிராமத்தில் நடைபெறும்

★

மாநில முதலமைச்சர் **காமராசர்** தலைமை வகிப்பார்

சி. என். அண்ணாதுரை
வரவேற்பாளர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அண்ணா

சுற்றுப்பயணம்

ஆகஸ்ட்
1: வேதநாயகம் நினைவு நாள்
ராஜாஜி மண்டபம்
2: கீழ்வழித்துணையாங்குப்பம்
பொதுக்கூட்டம்
3: சென்னை 27-வது வட்டம்
4: சென்னை
5: தண்டலம்
பொதுநல மாநாடு
8: காஞ்சீபுரம் திருமணம்
9: தாரமங்கலம்
10: கடலூர்
சிறப்பு சொற்பொழிவு
11: மதுரை
12: விழுப்புரம் திருமணம்
17: } திருவண்ணாமலை
18: } மாநாடு
19: பெண்ணாடகம்
20: ஆலத்தூர்
21: நெய்வேலி
25: குச்சிபாளையம்
கீழச்சாவடி
சிதம்பரம் டவுன்
30: மாயவரம்
காலை—திருமணம்
மாலை—ஸ்ரீமுஷ்ணம்
31: சென்னை—
கொருக்குப்பேட்டை
செப்டம்பர்
1: சென்னை—தியாகராயர்
கல்லூரி கலைக் கழகம்

சென்னை 13-வது வட்ட

தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

28—7—57 காலை 9-மணிக்கு, பாரிஸ் வெங்கடாசல அய்யர் தெருவில், எண் 19 இல்லத்தில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வருமாதலால், கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு கோரப்படுகின்றனர்.

சிவகாசி நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

28—7—57 மாலை 4-மணிக்கு சிவகாசி நகர் ஜவுளிக் கடை பண்டு மாடியில், மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது கழக ஆக்க வேலைகள் குறித்து முடிவெடுக்கப்படும்.

கெங்கவல்லி:
களத்துமேட்டில்
29—7—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: எஸ். துரைசாமி
பேசுவோர்:
எம்.பி.சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
டி. கே. சீனிவாசன்
நெடுமாறன், மாரிமுத்து
டி. ஆர். மாரியப்பன்

★

திருவள்ளூர் வட்ட—பேரம்பாக்கம்:
வாசகசாலை எதிரிலுள்ள
மைதானத்தில்
29—7—57 மாலை 6½ மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: தி. ந. சம்பந்தம்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.

மணலூர் எஸ்டேட்டில்

தி. மு. க. தொழிற்சங்கப் பொதுக் கூட்டம்

28—7—57-ல், தோழர் சவரிமுத்து கங்காணி தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; தோழர்கள் மதுரை எஸ். முத்து, மு. வசனப்பித்தன், கே. எஸ். சந்தானம் ஆகியோர், 'தி. மு. கழகமும், தொழிற்சங்கமும்' என்பது பற்றிப் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

28—7—57 மாலை 6-மணிக்கு காட்டுமன்னார்குடி 'சத்தியவாணிமுத்து சொற்பயிற்சி மன்ற' அலுவலகத்தில் மன்றத்தின் 3-வது கூட்டம் நடைபெறும்; 'திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் பொருள்பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

28—7—57 மாலை 6-மணிக்கு சென்னை 40-வது வட்டம் லாக் நகர் சாமி படிப்பகப் பணிமனையில் 'கொள்கையும் நாமும்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

விருதுநகர் அண்ணாமன்ற முதலாண்டு விழா

28—7—57 மாலை 6-மணிக்கு மேற்படி மன்ற முதலாண்டு நிறைவுவிழா மன்றத்தின் முன்பு தோழர் எஸ். இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சென்னை 40-வதுவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

28—7—57 காலை 10-மணிக்கு சேப்பாக்கம், சி. என். இருட்டிண சாலை எண் 29-ல் (நடேசன் பயில் நிலையம்), மேற்படி வட்ட தி. மு. க. புதிய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, கழக ஆக்க வேலைபற்றி ஆராயப்படும்.

பெங்களூர்—சீராமபுரம் தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

28—7—57 காலை 9-30 மணியளவில், கழகப் பணிமனையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; அதுபோது, ஆண்டு வரவு-செலவுக் கணக்கும், பல முக்கியப் பிரச்சினைகளும் ஆய்வுக்குவரும்.

'சாகாவரம்' நாடகம்

28—7—57 ஞாயிறு மாலை 6 மணி அளவில் சென்னை மியூசியம் தியேட்டரில், தோழர் கண்ணதாசன் அவர்கள் தலைமையிலும், காஞ்சி-கல்யாணசுந்தரம், இரா. செழியன், க. அறிவழகன், ஏ. கே. வில்வம், எஸ். எஸ். தென்னரசு, அ. மு. பரமசிவானந்தம், நாரண-துரைக்கண்ணன் ஆகியோர் முன்னிலையிலும், தோழர் ஏ. கபிலன் தீட்டிய 'சாகாவரம்' என்ற நாடகம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ் செழியன் எம்.ஏ.